**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை - 2020**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (“அதிகாரசபை”) இன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சுமார் ரூபா 79.82 மில்லியன் கிரயமான சொத்துக்களின் பயனுள்ள பொருளாதார வாழ்க்கைக் காலத்தை **எஸ்.எல்.பி.எஸ். ஏ.எஸ் 7 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** என்ற கணக்கீட்டு நியமத்திலுள்ள 65 ஆம் பந்தியின் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்படி முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் மதிப்பீட்டு வழு **எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ் 3 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் வழுக்கள்** என்ற நியமத்தின் பிரகாரம் திருத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கல்கள் | உள்ளக குழுவொன்றை நியமித்து முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி குழுவால் இந்த மீள் மதிப்பீட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்குழுவால் மீள் மதிப்பீட்டுச் செயன்முறை பூரணப்படுத்தப்பட்ட பின்னர் நிதிக்கூற்றுக்கள் சீராக்கப்படும். | முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயனுள்ள பொருளாதார வாழ்க்கை காலத்தை மறு மதிப்பீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுப்பதுடன், மீள் மதிப்பீடு செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மற்றும் கணக்கீட்டுப் பரிகாரங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ஆ) 2020 சனவரி 01 இல் உள்ளவாறான பதின்மூன்று (13) இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் ரூபா 19,512,500 மற்றும் ரூபா 7,317,187 தொகையான முறையே கிரயங்கள் மற்றும் முன்கொண்டு செல்லும் தொகை என்பன 2019 ஆம் ஆண்டிற்கான சொத்துக்கள் கணக்கெடுப்பின் போது, பயன்படுத்த முடியாதவை என அடையாளம் காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இந்தப் பொருட்களை கைதவிர்ப்பதற்கு 2021 ஒக்தோபர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்படாமல், மாறாக 2020 ஆம் ஆண்டின் போது அவற்றின் பெறுமானத்தேய்விடக் கூடிய பெறுமதி யான ரூபா 7,317,187 தொகை கணக்கீட்டு மத்திப்பீட்டுக்கான மாற்றம் ஒன்றாக நிறுத்திவைத்த இலாபத்திற்குச் சீராக்கப்பட்டிருந்தது. மேலும், **எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ் 3 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் வழுக்கள்** என்ற நியமத்தின் 44 ஆவது பிரிவின் பிரகாரம் இது தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்படவில்லை. | உரிமைத்துவ மாற்றங்கள் கூற்றிலுள்ள ஒப்பீட்டுத் தொகைகளிற்கு 2021 ஆம் ஆண்டின் கணக்குகளில் தேவையான வெளிப்படுத்த ல்கள் செய்யப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தேவையான கணக்கீட்டுப் பரிகாரங்கள் செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு (யூடீஏ) சொந்தமான காணியில் தொழிற்பட்டு வருகின்ற அதிகாரசபையின் நிர்மாண உபகரண பயிற்சி நிலையம் (CETRAC) இற்கான காணியின் உரித்துறுதியை வழங்குவதற்கு ரூபா 54,890,701 தொகையை செலுத்துமாறு 2019 ஆம் ஆண்டில் யூடீஏ அதிகாரசபையை கோரியிருந்தது. இருப்பினும், இந்த அறிக்கைத் திகதி வரை குறித்த தொகையை யூடீஏ இற்கு செலுத்தித் தீர்ப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்ததுடன் இது தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் எந்தவொரு ஏற்பாடோ அல்லது வெளிப் படுத்தலோ செய்யப்பட்டிருக்கவில்லை. | யூடீஏ இற்கு சொந்தமான காணியில் உள்ள CETRAC தொடர்பில் நிதிக்கூற்றுக் களில் பொருத்தமான ஏற்பா ட்டை அல்லது வெளிப் படுத்தலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த சிக்கலை தீர்ப்பதற்கு அதிகார சபை யூடீஏ உடன் முறையான குத்த கை உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத் திடுவதுடன் இறுதிக் கணக்குகளில் தொட ர்புடைய வெளிப்படு த்தல்கள் மற்றும் சீராக்கல்களை மேற் கொள்ள வேண்டும். |
| (ஆ) நிர்மாணச் சிறப்பு விருதுவழங்கல் விழா மீளாய்வாண்டில் நடாத்தப்படாத போதிலும், இந்த விழாவை 2020 இல் நடாத்தும் நோக்கத்திற்காக ஒப்பந்தகாரர்களிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 2,633,914 தொகையை நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப் பாக கருதுவதற்குப் பதிலாக செயற்பாடற்ற | நிர்மாணச் சிறப்பு விருது வழங்கல் விழாவை நடாத்து வதற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 2,633,914.00 தொகை கிடைத்தது. அது 2020 இன் நிதிக் கூற்றுக் களில் செயற்பாடற்ற வரு | 2021 ஆம் ஆண்டிற் கான இறுதிக் கணக்குகளை தயா ரிக்கையில் தேவை யான சீராக்கல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வருமானமொன்றாக நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான மிகை மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் என்பன முறையே அதிகரித்தும் குறைத்தும் கூறப்பட்டிருந்தன. | மானமொன்றாக அங்கீகரிக் கப்பட்டுள்ளது. அதனைத் திருத்துவதற்கு எதிர்வரும் ஆண்டில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (இ) 13 வருடகால உத்திரவாதத் தொடர் கல்வி (NVQ) பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 45,844,000 தொகையை கல்வி அமைச்சு அதிகாரசபைக்கு ஒதுக்கியிருந்தது. அதில் ரூபா 10,000,000 மற்றும் ரூபா 35,844,000 தொகைகள் முறையே மீளாய்வாண்டிலும் 2021 இலும் பெறப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அறிக்கையிடல் காலத்தில் இந்தப் பயிற்சித் திட்டத்திற்காக ரூபா 5,906,904 மாத்திரமே செலவாகியுள்ள போதிலும், ரூபா 45,398,000 தொகையினை 2020 ஆம் ஆண்டிற்கான வருமானமாக அதிகாரசபை அங்கீகரித்திருந்தது.<br>மேலும், செய்யப்பட்ட செலவினங்கள் மற்றும் அதன் மீதான மிகைகள் என்பன நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்வதற்காக அதிகாரசபை அட்டுறு அடிப்படையை பிரயோகிக்கின்றது. 13 வருடகால உத்திரவாதத் தொடர் கல்வி (NVQ) பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துவதற்காக 2020 ஆம் ஆண்டில் ரூபா 45,844,000 தொகையை கல்வி அமைச்சு அதிகார சபைக்கு ஒதுக்கியிருந்ததுடன், அது 2020 ஆம் ஆண்டுக்கான வருமானமாக பதியப்பட்டது. அதில் ரூபா 10,000,000 தொகை கல்வி அமைச்சிடமிருந்து பெறப்பட்டது. 2020 இன் எஞ்சிய தொகையை அமைச்சிடமிருந்து அதிகாரசபை கோரியுள்ளது. | உரிய வருமான அங்கீகரித்தல் கொள்கையினை அதிகாரசபை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதுடன் நிதிக் கூற்றுக்களில் போதியளவு வெளிப்படுத்தல்கள் செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | தொகை | கிடைக்காத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| i. குறுங்கால ஏற்பாடு | 156,400 | மீதி உறுதிப்படுத்தல் | கருத்துரை வழங்கப்படவில்லை | இந்த மீதிகளின் சரியான மற்றும் நம்பகத் தன்மையை மெய்மையாய்வு செய்வதற்குத் தேவையான சான்றுகளை முகாமைத்துவம் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| ii. முற்பணமாக கிடைத்த வருமானம் | 4,138,385 | விபரமான பட்டோலை | | |
| iii. பிரசுர வருமானம் | 5,279,206 | -மேற்படி- | | |
| iv. தொழிற்படு மூலதன மாற்றம் | 13,035,265 | -மேற்படி- | | |
| v. வாடகை வருமானம் | 5,829,303 | மதிப்பீட்டு அறிக்கை | | |
| vi. சுற்றுலா விடுதி – தஹய்யாகம மற்றும் கதிர்காமம் | இல்லை | NHDA உடன் குத்தகை உடன்படிக்கை | | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 14,173,303 தொகையான கடன்பட்டோர்களில் ரூபா 1,794,089 தொகைக்குரிய 06 கடன்பட்டோர்களிடமிருந்து மாத்திரமே உறுதிப்படுத்தல்கள் கிடைத்திருந்ததுடன், ஏனைய கடன்பட்டோர்கள் அவர்களது மீதிகளை 2021 ஒக்தோபர் 31 வரை உறுதிப்படுத்தியிருக்கவில்லை.<br>மேலும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட காலப் பகுப்பாய்வின் படி, ரூபா 5,115,648 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாமல் மூன்று ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக இருந்ததுடன் அந்தத் தொகை 2021 ஒக்தோபர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையால் 2020.12.31 இல் உள்ளவாறு அனைத்து நிலுவைக் கடன்பட்டோர்களிற்கும் உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டன. 03 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையிலுள்ள கடன்பட்டோர் மீதிகளை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென்பதுடன், இறுதிக் கணக்குகளின் கடன்பட்டோரின் நியாயப் பெறுமதி காண்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 4,135,111 மொத்தத் தொகையான வியாபார மற்றும் சில்லறைக் கடன்கொடுத்தோர்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக உள்ளதுடன் இந்த மீதிகள் தீர்வு செய்யப்படாமல் 2021 ஒக்தோபர் 31 வரை எவ்வித மாற்றமும் இன்றிக் காணப்பட்டது. | நீண்டகாலமாக நிலுவையிலுள்ள கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சாத்தியமான கடன்கொடுத்தோர் மீதிகளை தாமதமின்றி தீர்வு செய்வதற்கும் ஏனையவற்றை இறுதிக் கணக்குகளில் வருமானமாக கருதுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2018 நவம்பர் 14 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | நிதி அமைச்சரின் ஒத்திசை வுடன் பொதுத் திறைசேரியி டமிருந்து தேவையான அங்கீகாரங்கள் பெறப்படாமல் அழைப்பு வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் போன்ற குறுங்கால முதலீடுகளில் ரூபா.153,231,432 தொகை | ஆதிகாரசபை ஊழியர்களின் பணிக்கொடைக் கொடுப்பனவுக்காக இது வைக்கப்பட்டுள்ளது. | மேலதிகப் பணத்தை முதலீடு செய்வதற்கு முன்னர், தேவையான அங்கீகாரங்கள் பெறப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதலீடு செய்யப்பட்டிரு ந்ததுடன், மேற்படி முதலீ டுகளில், ரூபா 140,707,803 தொகை கடந்த 04 வருடங்களாக எவ்வித மாற்றமுமின்றிக் காணப்படுகின்றது. | | |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 571(2) | 2 ஆண்டுகளிற்கு மேற்ப ட்ட அனைத்து வைப்புக் களும் அதிகாரசபையின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்படாது இனங் காணப்படாத மற்றும் செலுத்தவேண்டிய பிடி காசு, கேள்விப்பண வைப்புக்கள் போன்ற காலங்கடந்த வைப்புக் களான முறையே ரூபா 1,787,782 மற்றும் 159,500 தொகைகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையால் வைப்புக்க ளில் வைக்கப்பட்டு ள்ளது. | குறித்த நடைமுறைப் பொறுப்பு மீதகளை அகற்றுவதற்கு நடவ டிக்கை எடுக்கப்படும். | அனைத்து நடை முறைப் பொறுப்பு மீதகளையும் ஒரு வருடத்திற்குள் அகற்றுவதற்கு பயனுள்ள நடவ டிக்கை எடுக்கப் பட வேண்டும். |
| (ii) 2015 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட 371 ஆவது நிதிப் பிரமாணம் மற்றும் அதிகாரசபையால் வெளியிடப்பட்ட 2020 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை | - முற்பணங்கள் அவை வழங்கப்பட்ட நோக்கம் பூர்த்தியடைந்ததும் உடனடியாக அல்லது நிதியாண்டின் இறுதியில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், 13 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு நோக்கங்க ளிற்காக வழங்கப்பட்ட ரூபா 683,700 கூட்டுத் தொகையான முற்பண ங்கள் 30 தொடக்கம் 170 நாட்கள் வரையான காலவீச்சில் தாமதிக்க ப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. | 2015 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக் கையால் திருத்தப்பட்ட 371 ஆவது நிதிப் பிரமாணம் மற்றும் அதிகாரசபையால் வெளியிடப்பட்ட 2020 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க உள்ளக சுற்ற றிக்கை போன்றவற் றுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். | உள்ளக மற்றும் வெளிவாரிச் சுற்றறிக்கைகளிலு ள்ள ஏற்பாடுக ளுடன் இணங்கு வதற்கு உரிய கவனம் செலுத் தப்பட வேண்டும். |
| | - வழங்கப்பட்ட உப கட்டுநிதி மீதிகள் ஒவ் வொரு அறிக்கையிடல் காலமும் முடிவடைவ தற்கு முன்னர் தீர்க்கப் பட வேண்டிய போதி | உரிய வேளையில் கட்டுநிதிகளை தீர்ப்ப தற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்துரைத்த காலத்தில் அனைத்து உப கட்டுநிதிகளும் தீர்க்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | லும், நான்கு தரப்புக்களிற்கு 5 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 4,092,735 தொகையான அவ்வாறான கட்டு நிதிகள் 2020 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | | |
| | | - 17 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 965,150 செயல் நிமித்த உப கட்டுநிதிகளில், ரூபா 492,226 அல்லது 22 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையானவை அவ்வாறான முற்பணங்களை வழங்குவதற்கு முன்னர் உரிய மதிப்பீட்டைத் தயாரித்திருக்காமையால் 07 தொடக்கம் 196 நாட்கள் வரை தாமதித்த பின்னர் காசாக மீளளிக்கப்பட்டிருந்தது. | முற்பணங்களை வழங்குவதற்கு முன்னர் உரிய மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்ட பின்னரே உப கட்டுநிதிகள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணங்கள் 756, 757, 758 மற்றும் 759 | ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் இறுதியில் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற நடைமுறையல்லா சொத்துக்களின் பௌதீக கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்திற்கும் வருடாந்த சொத்துக் கணக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தின் சொத்துக்கள் தொடர்பில் இக்கணக்கெடுப்பு 2021 நவம்பர் 30 வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தின் நடைமுறையல்லா சொத்துக்கள் தொடர்பிலான வருடாந்த கணக்கெடுப்பு நாட்டில் நிலவிய கொவிட் - 19 நோய்த் தொற்று காரணமாக குழுவால் நடாத்தப்பட முடியவில்லை.<br>இந்த வேலை இதற்கான குழுவால் முடிக்கப்பட்டு கணக்கெடுப்பு அறிக்கை உடனடியாக சமர்ப்பிக்கப்படும். | நிதிக் கூற்றுக்களிலும் நிலையான செதத்துக்கள் பதிவேட்டிலும் காண்பிக்கப்படுகின்ற நடைமுறையல்லா சொத்துக்களின் பௌதீக கிடைப்பனவை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் வருடாந்த சொத்துக் கணக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2018 யூலை 16 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி | அதிகாரசபை 2019 ஆம் ஆண்டில் நிதிக் குத்தகையின் கீழ் 3 மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்திருந்ததுடன் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி இந்த நோக்கத்திற்காக அதிகாரசபைக்குச் சொந்தமான மூன்று வாகனங்கள் | வாகனங்களை மதிப்பிடும் ஒரு குழு நியமிக்கப்பட்டதுடன் குறித்த பெறுமதியிடல் அறிக்கைகள் பெறப்பட்டன. அதன்படி, திறைசேரிக்கு பணத்தை அனுப்பிவைப்பதற்காக அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள் | புதிய வாகனங்கள் கொள்வனவு செய்யப்படுகையில் தற்போதுள்ள வாகனங்கள் கைதவிர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் பழைய வாகனத்தின் விற்பனையிலிருந்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கைதவிர்க்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வருமானம் பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். இருப்பினும், கைதவிர்ப்பதற்காக உத்தேசிக்கப்பட்ட ஒரு வாகனம் அவ்வாறு கைதவிர்க்கப்படாது 2021 ஒக்தோபர் வரை அதிகாரசபையின் வளவில் வைக்கப்பட்டிருந்தது. அத்துடன், ஏனைய இரண்டு வாகனங்களின் விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 5,773,000 தொகை திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படாது இரண்டு ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக அதிகார சபையில் வைக்கப்பட்டுள்ளது. | ளன. | கிடைக்கின்ற தொகை புதிய வாகனம் கொள்வனவு செய்யப்பட்டபின்னர் பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2020 சனவரி 27 ஆந் திகதிய பீஈடி/01/2020 ஆம் இலக்க நிதி, பொருளாதார மற்றும் கொள்கை வகுத்தல் அமைச்சின் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி | ஒவ்வொரு சேவைக்குமான கட்டணங்கள், மதிப்பிடப்பட்ட காலம் போன்றவற்றை உள்ளடக்கிய பிரசைகள் சாசனம் பொதுமக்கள்/ சேவை நாடுனரின் பார்வைக்காக அலவலக வளவிலும் நிறுவனத்தின் இணைய தளத்திலும் காட்சிப்படுத்தப்படுவதனை தலைவரும் பணிப்பாளர் சபையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். இருப்பினும், அதிகாரசபை இந்த அறிவுறுத்தலுடன் இணங்கி ஒழுகியிருக்கவில்லை. | பிரசைகள் சாசனம் அதிகாரபையால் வரையப்பட்டுள்ளதுடன் அது காலக்கிரமத்தில் பூரணப்படுத்தப்பட்டு பொதுமக்களின் பார்வைக்காக நிறுவனத்தின் இணைய தளத்தில் காட்சிப்படுத்தப்படும். | அதிகாரசபையின் பொதுமக்களுக்கான வகைகூறலையும் நல்லாளுகையையும் மேம்படுத்துவதற்காக பிரசைகள் சாசனம் தயாரிக்கப்பட்டு பார்வைக்காக காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (உ) | நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டலின் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சற்றறிக்கையின் 4.2.5 ஆம் பந்தி | இருப்புக்கள் மீதான காலப்பகுப்பாய்வு மாதாந்த அடிப்படையில் பணிப்பாளர் சபையின் மீளாய்வுக்கும் கலந்தாலோசித்தலுக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபை அதன் கணக்கீட்டு முறைமையிலிருந்து இருப்பு காலப் பகுப்பாய்வு அறிக்கையை உருவாக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. ஆகையால், இரு | இருப்புக் காலப்பகுப்பாய்வை உருவாக்கும் விதத்தில் முறைமையை முன்னேற்றுவதற்காக முறைமை அபிவிருத்தி செய்வோருடன் நாம் கலந்துரையாட உள்ளோம். அத்துடன், மெதுவாக நகர்கின்ற, அசைவுறாதுள்ள மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இருப்புக்கள் பொருள் கணக்கெடுப்பின் போது | நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர், மெதுவாக நகர்கின்ற, அசைவுறாதுள்ள மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இருப்புக்கள் காலப் பகுப்பாய்வின் அடிப்படையில் கண்டறியப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ப்புக் காலப்பகுப்பாய்வின் அடிப்படையில் மெதுவாக நகர்கின்ற, அசைவுறாதுள்ள மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத இருப்புக்களை கண்டறிவதில் அதிகாரசபை சிரமத்தை எதிர்கொண்டுள்ளது. | கண்டறியப்படும். | |
| (ஊ) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 05 உத்தியோகத்தர்களால் அங்கீகரித்த வரம்பை மீறி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 621,076 பெறுமதியுடைய 4,436 லீற்றர் எரிபொருள் தொடர்பில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | கொரொனா நோய்த் தொற்று காரணமாக மாகாணங்களிற்கு இடையே போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், இங்கே குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களது வாகனங்கள் பொதுப் போக்குவரத்துக்காகவும் பயன்படுத்தப்பட்டது. அதற்கமைய, எரிபொருளின் அளவு அந்த பணிகளிற்காகவும் பயன்படுத்தப் பட்டது. | அதிகாரசபை சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும். |

## 1.8 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) கல்குளம் இயந்திர இயக்குனர் தொழிற்பயிற்சி கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2018 முதல் 2020 வரையான காலத்தில் பொதுத் திறைசேரியில் இருந்து ரூபா 135 மில்லியன் பெறப்பட்டிருந்தது. இதிலிருந்து 26 சதவீதத்திற்கச் சமனான ரூபா 34.6 மில்லியன் குறித்த தேவைக்காக பயன்படுத்தப்படாது வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்ற விதத்தில் வைக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் பெறப்பட்ட நிதி ஒதுக்கீடானது முன்னுரிமைப்படுத்தப்பட்ட அகழ்வு இயந்திரத்தின் (Bacholoder) பெறுகைக்காக போதுமானதாக இல்லாமையால் கேள்விமனு மதிப்பீட்டுக் கட்டத்தினை நிறைவுசெய்துள்ள பெறுகைக்குத் தேவையான மேலதிக நிதி ஏற்பாட்டினை பெற்றுக் கொள்வதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.<br>செய்றபாட்டுக்குப் பொதுமான நிதி ஒதுக்கீடுகள் வருடத்தில் கிடைக்கப் பெறாமையால் செயற்திட்ட அறிக்கையிலுள்ள வேறு பணிகளிற்காக ஒதுக்கீடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | விளைவற்ற முறையில் வங்கி நடைமுறைக் கணக்கில் நிதியை வைத்திருக்காமல் குறித்த தேவைக்கு அதனைப் பயன்படுத்துவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) அதிகாரபையின் தலைமை அலுவலகத்தினால் பேணப்பட்ட வங்கி நடைமுறைக் கணக்கில் சராசரியாக ரூபா 202 மில்லியன், ரூபா 260 மில்லியன் மற்றும் ரூபா 357 மில்லியன் நிலுவைகள் முறையே 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது விளைவற்று வைக்கப்பட்டிருந்த துடன், இந்த நிலுவையானது தொடர்ச்சியாக அதிகரித்து 2021 ஒக்தோபர் 31 ஆந் திகதியன்று ரூபா 426 மில்லியனாக அதிகரித் திருந்ததுடன் அது எந்த தேவைக் காகவும் பயன்படுத்தப்பட்டிருக் கவில்லை. 2018 சனவரி முதல் 2021 ஒக்தோபர் வரை மேற்படி பணத்தை வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்ற முறையில் வைத்திருந்ததன் விளைவாக அதிகாரசபைக்கு ஏறத்தாழ ரூபா 98 மில்லியன் நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. | வங்கி நடைமுறைக் கணக்கி லுள்ள ரூபா 426 மில்லியன் தொகையில் ரூபா 200 மில்லியன் தொகையானது திறைசேரியிலிருந்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களிற்காக கிடைத்திருந்த கட்டுநிதியை உள்ளடக்கியுள்ளது. எஞ்சிய கட்டுநிதியை உரிய தேவை களிற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விளைவற்ற முறை யில் வங்கி நடை முறைக் கணக்கில் நிதியை வைத்திரு க்காமல் குறித்த தேவைக்கு அத னைப் பயன்படுத் துவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்க ப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 25,998,627 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,652,776 ஆக காணப்பட்டதனால் நிதி விளைவுகளில் ரூபா 30,651,403 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. கல்வி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட ரூபா 45,844,000 மொத்தத் தொகையும் மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையே நிதி விளைவுகளில் ஏற்பட்ட இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிர்மாணத் தொழிலில் ஈடுபட்டுள்ள தேர்ச்சிபெற்ற கைவினைஞர்களிற்கு கைவினைஞர் அடையாள அட்டை களை விநியோகிப்பதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து 2019 மற்றும் 2020 ஆம் முண்டுகளில் ரூபா 35.7 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்தது. இதில் ரூபா 11.3 மில்லியன் தொகை இத்திட்டத்தை செய்றபடுத்துவதற்காக முற்பணம் ஒன்றாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவன த்திற்கு (ICTA) 2019 ஆம் ஆண்டில் | தொடர்படைய பட்டியல் களிற்கு உரிய பணத்தை மீளளிக்க வேண்டிய கடப்பாடு தமக்கு உள்ள தாக இது தொடர்பில் நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த வேலை தற்போது இடம்பெற்று வருகின்றது. | எவ்வித தாமதமும் இன்றி இந்த வேலையை பூரணப்படுத்தவதற்கும் மிகுதிப் பணத்தை ICTA இடமிருந்து அல்லது பொறுப்பு வாய்ந்த நபர்களிடமிருந்து அறிவி டுவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேணடும். |

செலுத்தப்பட்டிருந்தது. இந்த வேலை யானது 2020 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அது 2021 நவம்பர் இறுதி வரையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த முற்பணக் கொடுப்பனவான ரூபா 11.3 மில்லியன் ICTA இனால் இரண்டு வருடங்களிற்கும் மேலாக வைத்திருக்கப் பட்டிருந்த போதிலும், அதிகார சபையானது ஏற்பட்டிருந்த நிதி நட்டத்தை கணிப்பிட்டு அதனை பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2006 சனவரி 01 முதல் 2011 மே 31 வரையான காலப்பகுதிக்குரிய ஊழியர் சேமலாப நிதி (EPF) தொகையான ரூபா 14,977,525 தெகையினை செலுத்தத் தவறியமையால் EPF இனால் ரூபா 5,691,460 தொகை மிகை அறிவீடாக விதிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த செலுத்தவேண்டிய தொகையானது 2021 நவம்பர் 30 வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மிகை அறிவீட்டுடன் சேர்த்து இந்த தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிக மிகை அறிவீட்டு விதிப்பினை தவர்ப்பதற்காக உடனடியாக இந்த தொகை செலுத்தித் தீர்க்கப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டு ஆறு ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அதிகார சபையின் சீரான மற்றும் பயனுறுதியான செயற்பாட்டிற்காக 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் செயற்பாடுகளை அதிகாரசபை செயற்படுத்தியிருக்கவில்லை.<br><br>• இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் தீர்மானிக்கப்பட்டவாறாக நிர்மாணத் தொழிலில் பயன்படுத்தப்படும் நிர்மாணப் பொருட்கள் மற்றும் நிர்மாண ஆக்கக் கூறுகளின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குனர்களின் விபரக்கொத் | குறித்துக் கொள்ளப்பட்டது. | நாட்டின் நிர்மாணக் கைத்தொழிலிற்கான பங்களிப்பை மேம்படுத்தி அதிகரிப்பதற்காக இந்த செயற்பாடுகளை அதிகாரசபை துரிதப்படுத்த வேண்டும். |

தொன்றை பேணுதல்.

- இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்ப ட்டவாறு நிர்மாணக் கைத் தொழிலில் ஈடுபடுகின்ற திறமையான வேலையாட்களி ற்கு கைவினை அடையாள அட்டைகளை பதிவுசெய்து, வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல்.
- நிர்மாணக் கைத்தொழில் அபி விருத்தி நிதியத்தை ஸ்தா பித்தல்.
- வேறு நாடுகளில் நிர்மாண வேலைகளை பொறுப் பெடுக்கும் உள்நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் களை மேம்படுத்தி அவர் களிற்கு வசதியளித்தல்.
- நிர்மாணக் கைத்தொழிலிற்குத் தேவைப்படுகின்ற பொருட்கள், பொறிகள் மற்றும் உபகர ணங்களை பரிசீலனை செய்த லும் கண்காணித்தலும் அத்து டன் நிர்மாண வேலைகளில் உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவித்தலும்.
- நிர்மாணக் கைத்தொழில் மீதான தேசிய தரவுத் தளமொன்றை பேணுதல்.

### 3.4 நிதிகளின் குறைவான பயன்பாடு

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| தனியார் மற்றும் அரசாங்க பங்குடமை மாதிரியின் (PPP Model) கீழ் நிர்மாணக் கைத்தொழிலிற்கான திறன் பயிற்சி நெறியை அமுல்படுத்துவ தற்காக 2016 முதல் 2020 வரையான காலத்தில் வரிசை அமைச்சின் ஊடாக அதிகாரபைக்கு ரூபா 1,077 மில்லியன் கட்டுநிதி பொதுத் திறைசேரியால் விடுவிக்கப்பட்டிருந்தது. இதில் ரூபா 114.2 மில்லியன் தொகை குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்த ப்படாது வங்கி நடைமுறைக் கணக்கில் 2021 ஒக்தோபர் 31 வரையிலும் வைக்கப்பட்டிருந்தது. | எஞ்சிய திறைசேரி கட்டு நிதியை உரிய நோக்கங்க ளிற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விளைவற்ற முறை யில் வங்கி நடை முறைக் கணக்கில் நிதியை வைத்திரு க்காமல் குறித்த தேவைக்கு அத னைப் பயன்படுத் துவதற்கு பயனுள்ள நடவடிக்கை எடுக்க ப்பட வேண்டும். |

### 3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| கல்குளம இல் சுற்றுலா விடுதியொன்றை நிர்மாணிப்பதற்காக 2018 நவம்பர் 07 ஆந் திகதி ரூபா 17,296,564 தொகைக்கு ஒப்பந்தகாரர் ஒருவருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக் கையிலுள்ள பொது நிபந்தனையின் படி ஒப்பந்த உடன்படிக்கை திகதியிலிருந்து 210 நாட்களிற்குள் ஒப்பந்த வேலைகள் பூரணப்படுத் தப்படுதல் வேண்டும். இருப்பினும், சுற்றுலா விடுதியானது 2020 யூன் 18 ஆந் திகதியன்றே அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஆனால், தாதமக் கட்டணங்களை அறிவிடுதல் தொடர்பிலான ஏற்பாடுகள் ஒப்பந்த உடன்படிக்கையில் காணப்படாமை யால் தாமதக் கட்டணத்தை அறிவிட முடியாத நிலை அதிகாரசபைக்கு ஏற்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரர் செய்த கோரிக்கைகளை பரிசீலித்து ஆலோசகரின் பரிந்துரைக்கு அமைய 3 கால நீட்டிப்பு களை அதிகாரசபை வழங்கி யது. அங்கீகரிக்கப்பட்ட கால நீட்டிப்புகளை தாமதப்படுத் தாமல் ஒப்பந்ததாரரால் வேலைகள் முடிக்கப்பட்டன. இருப்பினும், முடிந்தளவு விரைவாக 2020 யூன் 18 ஆந் திகதியன்று இது கையளிக்கப்பட்டது. எனவே, இந்த திட்டம் தாமதக் கட்டணங்களை கோருவதற்கு கருத்திற் கொள்ளப்படவி ல்லை. | தாமதங்களை இழிவு படுத்தி, தேசத்திற்கு நிதி ரீதியான அதியுயர் நலன்மிக்க சேவை களைப் பெற்றுக் கொள் வதற்கு அரசாங்க பெறுகை நடைமுறை களை அதிகாரசபை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் படி, 2016 முதல் 2020 வரையான காலத்தில் நிர்மாணக் கைத்தொழில் நிகழ்ச்சி த்திட்டத்திற்கான திறன் பயிற்சி நெறியை நடாத்துவதற்காக ரூபா ரூபா 103,263,865 பெறுமதியுடைய பயிற்சி கருவி தொகுதிகள், ரூபா 10,054,498 பெறுமதியான பயிற்சி பொருட்கள் (பயிற்றுவிப்பாளர் மற்றும் பயிலுநர் வழிகாட்டிகள் மற்றும் பதிவு புத்தகங்கள்) மற்றும் ரூபா 50,146,836 பெறுமதி யான சீருடைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரசாங்க பெறுகை வழிகாட்டல்களிலுள்ள வழிகாட்டுதல்களை மீறியமை மற்றும் தரமற்ற பொருட்களைக் கொள்வனவு செய்திருந்தமை போன்றவற்றின் காரணமாக, மீளாய்வாண்டின் இறுதிவரை அதிகாரசபைக்கு ரூபா 52.25 மில்லியன் இழப்பு ஏற்பட்டிருந்தது. | கருவிகளைப் பெறுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்றிய உத்தியோத்தரால் மாதிரிகள் விலையுடன் ஒப்பிடப்பட்டு பரிசோதி க்கப்பட்டுள்ளன. இந்த மாதிரிகளை பரிசோதிக்கும் குழுவின் தலைவ ராக இது தொடர்பில் விசேட நிபுணத்துவம் கொண்ட பொறியா ளர் ஒருவர் நியமிக்கப்பட்டி ருந்தார். இதன்படி, ஆகக் குறைந்த விலைக்கும், இரண்டா வது விலைக்கும் முன்னுரிமை அளித்து, அரச நிறுவனமான, கட்டடப் பொருட்கள் கூட்டுத் தாபனத்திடம் இருந்து, உபகரணப் பெட்டிகளை பெற்றுக் கொள்ள பரிந்துரை செய்யப்பட்டது. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர்களிடமிருந்து மாதி ரிகள் பெறப்பட்டு, குறைந்த விலையில் சிறந்த தரமான பொருட்களை வழங்கக் கூடிய வழங்குனர்கள் தெரிவு செய்ய ப்பட்டனர். | தேசத்திற்கு நிதிரீதியான அதியுயர் நலன்மிக்க சேவைகளையும் தரமான பொருட்களையும் பெற்று க்கொள்வதற்கு அரசா ங்க பெறுகை நடை முறைகளை அதிகார சபை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். |

### 3.7 ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED / 12 ஆம் இலக்க நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக அதிகார சபையின் ஒரு ஊழியர் 2015 பெப்ரவரி 09 முதல் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட் டிருந்தார்/இணைக்கப்பட்டிருந்தார். 2015 முதல் பெப்ரவரி 09 முதல் 2020 டிசம்பர் 31 வரையிலான காலப் பகுதியில் இந்த உத்தியோகத்தருக்கு சம்பளம் மற்றும் பிற கொடுப்பனவுகாக சுமார் ரூபா 4,687,732 செலுத்தப் பட்டிருந்த போதிலும், 2021 ஒக்தோபர் 31 வரை வரிசை அமைச்சிலிருந்து எந்த நிதியும் திருப்பிச் செலுத்தப்பட் டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | பொது முயற்சிகள் திணைக் களத்தின் அங்கீகாரம் இன்றி அதிகாரசபையின் எந்த ஊழியரும் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட/ இணைக்கப்படக் கூடாது. |

### 3.8 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED / 12 ஆம் இலக்க நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் பிரிவின் படி, அதிகார சபையின் மனித வளத்தின் சீரான மற்றும் பயனுறுதியான நிர்வாகத்தி ற்காக மனித வள முகாமைத்து வத்துடன் தொடர்புடைய சகல விதிகள் மற்றும் பிரமாணங்களை உள்ளடக்கிய வழிகாட்டல் கையேடொன்று அதிகார சபையிடம் காணப்படவில்லை. | அதிகாரசபையின் மனித வள மற்றும் நிர்வாக நடைமுறை கள் கையேடு 2019 சனவரி 30 இல் இடம்பெற்ற 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவச் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக் கப்பட்டது. | அதிகாரசபையின் மனித வளத்தின் பனுள்ள நிர்வாக த்திற்கான வழிகாட்டல் கையேடொன்றை அதிகார சபை வைத்திருத்தல் வேண் டும். |

### 3.9 வாகன தொகுதி முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வா ண்டின் போது 8 வாகனங்கள் 10 சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளா கியிருந்ததுடன் அவற்றில் 06 விபத்துக்கள் தொடர்பில் மாத்திரமே குறித்த காப்புறுதிக் கம்பனியிட மிருந்து காப்புறுதிக் கோரிக்கைகள் பெறப்பட்டிருந்தன. இருப்பினும் எஞ்சிய நான்கு வாகன விபத்துக்களின் நட்டங்கள் மற்றும் இந்த வாகன விபத்துக்களுக்கான ஆரம்ப அறிக்கையும் இறுதி அறிக்கையும் கணக்காய்விற்குச் | அந்த நான்கு வாகனங் களில் இரண்டு வாகனங் கள் திருத்தப்பட்டன. எஞ்சிய இரண்டு வாகனங்களும் விரைவாகத் திருத்தப்படும். | நட்டத்தின் அளவை மதிப்பிடுவதற்காக விபத் துக்களுக்கான ஆரம்ப அறிக்கையும் இறுதி அறிக்கையும் கணக்கா ய்விற்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். |

சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ஆ) அதிகாரசபையின் ரூபா 6,981,250 கிரயமான ஆறு வாகனங்கள் (ஒரு வாகத்தின் கிரயம் தவிர்த்து) அதிகாரசபையின் கீழுள்ள CETRAC இன் வளவில் 2 முதல் 5 ஆண்டுகளாக திருத்தப்படாது, பயன்ப டுத்தப்படாது அல்லது கைதவிர்க்க ப்படாது துருப்பிடிக்கும் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. | நான்கு வாகனங்களை கைதவிர்ப்பதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டதுடன், இரண்டு வாகனங்கள் திருத்தப்பட்டு வருகின்றன. | பொதுச் சொத்துக்களின் மீதான பாதுகாப்பை அதிகரிப்பதற்கு பயன்படு த்தப்படாத வாகனங் களை கைதவிர்ப்பதற்கு உரிய வேளையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/ 2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவின் படி ஒரு எரிபொருள் பரிசோத னையிலிருந்து 12 மாதங் களின் பின்னர் அல்லது 25,000 கி.மீ. தூரம் பயணித்த பின்னர் அல்லது என்ஜின் மீது பாரிய திருத்தம் மேற்கொள்ளப் பட்ட பின்னர் என்ற நிகழ்வுகளில் எது முதலில் நிகழ்கின்றதோ அந்த நிகழ்வின் போது மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள் ளப்படுதல் வேண்டும். இருப்பினும், அதிகாரசபைக்குச் சொந்தமான 50 வாகனங்களிற்கான இந்த பரிசோ தனை அறிக்கைகளை கணக்காய் விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. | வாகன எரிபொருள் பரிசோ தனைகள் 2020 இல் நடாத்தப்பட்டதுடன் 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி இப்பரிசோதனை மீண் டும் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுக ளுடன் இணங்கி ஒழுகு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டுக்கான அதிகார சபையின் வருடாந்த அறிக்கை இவ் அறிக்கைத் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட் டிருக்கவில்லை. | அமைச்சரவையின் அங்கீ காரத்தைப் பெற்றுக்கொள் வதற்காக மூன்று மொழிக ளிலும் தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கை 2021.08.04 ஆம் திகதி வீடமைப்பு, நிர்மாண மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | மேலும் தாமதமின்றி அவ் அறிக்கைகளை பாராளு மன்றத்தில் முன்வைப்பதற் கான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். |